# விவசாயம் பக்கம் நாங்க திரும்பினதுக்கு காரணம்

## அமெரிக்கா கொடுத்த அதிர்ச்சிதான்...



வெளிநாட்டுக்கு சென்றோமா, அங்கு வேலை பார்த்தோமா, கை நிறைய சம்பளம் வாங்கினோமா, அந்த நாட்டின் குடியுரிமையை வாங்கி அங்கேயே செட்டில் ஆனோமா -

என்று இல்லாமல் இந்தியாவுக்கு திரும்பி வந்து இங்குள்ள விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுக்க தங்களால் முயன்றதை செய்து வருகிறார்கள் கோவையை சேர்ந்த ஸ்ரீதேவி - ரமேஷ் சந்திரன் தம்பதி.

கவனிக்க வேண்டிய முதல் விஷயம், அமெரிக்காவில் பார்த்து வந்த வேலையை இருவரும் தூக்கி எறிந்தது.

இரண்டாவது, இவர்கள் நேரடியாக விவசாயம் செய்வதில்லை. மாறாக இயற்கை விவசாயம் செய்பவர்களிடமிருந்து விளைச்சலை நேரடியாக வாங்கி வாடிக்கையாளர்களுக்கு சப்ளை செய்கிறார்கள். இதனால் இடைத்தரகர்கள் தொந்தரவு இன்றி கணிசமான லாபத்தை சம்பந்தப்பட்ட இயற்கை விவசாயிகள் சம்பாதிக்கிறார்கள்.

“எங்கள் நோக்கமே அதுதான். அனைத்து விவசாயிகளும் இயற்கை முறையில் விவசாயம் செய்ய வேண்டும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் மட்டுமல்ல... அவர்களும் பயன்பெற வேண்டும்...’’ என்று கோரசாக சொல்லும் ஸ்ரீதேவியும், ரமேஷ் சந்திரனும் இதற்காகவே ‘பயோ பேசிக்ஸ்’ நிறுவனம் மூலம் ஆன்லைன் முறையில் இயற்கை முறையில் விளைந்த பயிர்களை நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பெற்று மக்களுக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

“நான் அமெரிக்காவிலும் நெதர்லாந்திலும் இருக்கிற இன்சூரன்ஸ் கம்பெனில வேலை பார்த்து வந்தேன். எம்.பி.ஏ., படிச்சது கூட அங்கதான். ஸ்ரீதேவியும் இன்சூரன்ஸ் தொடர்பான வேலைல இருந்தவங்கதான். அதே மாதிரி அவங்க எம்.எஸ்.ஸி. சோஷியாலஜியை படிச்சதும் அமெரிக்காவுலதான்...” என்று ஆரம்பித்தார் ரமேஷ் சந்திரன்.

‘‘ஸ்ரீதேவியும் வேலை பார்த்துட்டு இருந்தவங்கதான். பத்து வருஷங்களுக்கு முன்னாடி ஒருநாள் திடீர்னு அவங்க தங்களோட வேலையை ராஜினாமா செய்தாங்க. ‘விவசாயத்துக்காக என்னை அர்ப்பணிக்கப் போறேன்’னு அவங்க சொன்னப்ப எனக்கு ஆச்சர்யமா இருந்தது. தடுக்கணும்னு தோணவேயில்ல. முழு ஆதரவும் தெரிவிச்சேன். அது மட்டுமில்ல... அவங்க போன இடங்களுக்கு எல்லாம் நானும் கூடவே போனேன். விவசாயம்னா என்னன்னு அப்பத்தான் தெரிஞ்சுகிட்டேன். நாம சாப்பிடறது உணவுகள் இல்ல... அத்தனையும் விஷம்னு புரிஞ்சுது. தவிர இயற்கை விவசாயத்துக்கு மதிப்பே இல்லாம போனதையும் கண்கூடா பார்த்தேன். பல விவசாயிகள் தற்கொலை செய்துக்கறதுக்கான காரணம் முகத்துல அறைஞ்சது. இது எங்க ரெண்டு பேரையுமே பாதிச்சது. எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு இந்தியா வந்துட்டோம்...’’ என்று சொன்னவரை தொடர்ந்தார் ஸ்ரீதேவி.

“அப்ப நாங்க அமெரிக்காவுல வாழ்ந்துகிட்டு இருந்தோம். அங்க இருக்கிற பெரும்பாலானவர்கள் குண்டா இருப்பாங்க. எனக்கு ஷாக்கிங்கா இருந்தது. ஒரு நகரத்துல கிட்டத்தட்ட தொண்ணூற்று ஐந்து சதவிகித மக்கள் குண்டா இருக்காங்கன்னா அதுக்கு நிச்சயம் அவங்க உணவுமுறைதான் காரணமா இருக்கணும். இதை புரிஞ்சுக்க பெரிய அறிவு எல்லாம் அவசியமில்ல.

முதன் முதல்ல என்னை டிஸ்டர்ப் செய்தது இதுதான். உடனே என்னென்ன சாப்பிடறாங்கன்னு ஆராய ஆரம்பிச்சேன். எல்லாருமே துரித உணவுகளுக்கு அடிமையா இருக்கறது புரிஞ்சுது. குறைந்த விலைல அந்த உணவுகள்தான் சல்லீசா கிடைச்சது. சுவைக்காக அதுல சேர்க்கப்படும் சேர்மானங்கள் மேல மக்கள் பைத்தியமாவே இருந்தாங்க.

யாரோ சம்மட்டியால தொடர்ந்து என்னை அடிக்கிறா மாதிரி அதிர்ந்து போனேன். என்னால இதை ஜீரணிக்கவே முடியலை. ஒரு தலைமுறையையே எந்தளவுக்கு நாம கெடுத்திருக்கோம்..?



ரமேஷ் சந்திரன், ஸ்ரீதேவி

நினைக்க நினைக்க மனசு ஆறவேயில்ல. இதுக்கு நம்மால் முடிந்த அளவு தீர்வு காணணும்னு முடிவு செய்தேன். விவசாய ஆர்வலரா என்னை நானே மாத்திகிட்டேன். அது தொடர்பான செயல்பாட்டிலும் என்னை ஈடுபடுத்திகிட்டேன். பி.டி கத்தரிக்காயை தடுக்க பல உத்திகளை கையாண்டேன். அது குறித்த விழிப்புணர்வை பரவலாக்க வேலை பார்த்தேன்.

இந்த சூழல்லதான் நாங்க இந்தியா வர முடிவு செய்தோம். உண்மைலயே இந்தியாவுக்கு திரும்பி நம்ம மக்களை பார்த்தப்ப அமெரிக்காவை விட பலத்த அதிர்ச்சி ஏற்பட்டது. மை காட்... இங்கயும் மக்கள் துரித உணவுக்கு அடிமையாகி இருக்காங்க. என்னாலயும் ரமேஷாலயும் இதை டைஜெஸ்ட் பண்ணவே முடியலை. உடனே ரமேஷூம் தன் வேலையை ரிஸைன் செய்தார்...” மூச்சு விடாமல் பேசிய ஸ்ரீதேவி, ரிலாக்ஸ் ஆக புன்னகையுடன் தொடர்ந்தார் ரமேஷ்.

“சமூக நிறுவனங்கள் ஏதாவது ஆரம்பிக்கணும்னு எனக்குள்ள எண்ணம் இருந்தது. அதனால கோவைக்கு வந்ததுமே கார்பரேட் நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுத்தபடியே கலந்து கொண்ட இளைஞர்களிடம் சமூக சேவை குறித்த பாடத்தையும் நடத்தினேன். முடிந்த அளவுக்கு அவங்க மனசுக்குள்ள இது தொடர்பான விதைகளை தூவினேன்.

இதே மாதிரி எண்ணத்தோட பல என்.ஜி.ஓ., செயல்பட்டு வருது. ஆனா, அவங்க

எல்லாருமே மத்தவங்க ஆதரவை எதிர் பார்த்துத்தான் இருக்காங்க. பொருளாதார பின்னணி இல்லாம சமூக சேவை செய்யவே முடியாது. சொல்லப்போனா சேவை செய்யணும்னு நினைக்கிற பல இளைஞர்களுக்கு பணமே பிரச்னையா இருந்தது. அதனால தான் மனசுக்குள்ள ஆர்வம் இருந்தும் அவங்களால களத்துல இறங்கி சமூக சேவை எதுவும் செய்ய முடியலை.

இவங்களுக்கு எல்லாம் முன்னோடியா இருக்க விரும்பினோம். ‘சமூக சேவையை விவசாயம் தொடர்பாவே செய்வோம்’னு ஸ்ரீதேவி சொன்னாங்க. எனக்கும் அதுதான் சரின்னு பட்டுச்சு. ஏன்னா, ஸ்ரீதேவிக்கு இதுல முன் அனுபவம் உண்டு. தேசிய அளவுல அவங்க விவசாய ஆர்வலரா இருக்கறதால அனைத்து நாடுகளிலும் வசிக்கும் விவசாயிகள் குறித்தும், விவசாயம் குறித்தும் ஃபிங்கர் டிப்ஸ்ல தகவல்கள் வைச்சிருந்தாங்க...” என்ற ரமேஷை தொடர்ந்தார் ஸ்ரீதேவி.

“கோவையை சுற்றிலும் விவசாயத்துக்காக நிலம் தேட ஆரம்பிச்சோம். அப்ப நிறைய விவசாயிகளை சந்திக்க வேண்டியிருந்தது. சொல்லி வைச்சா மாதிரி எல்லாரும் ஒரே கேள்வியை வெவ்வேறு விதமா கேட்டாங்க.

‘விவசாயம் எங்களுக்கு தொழில். எங்களோட வாழ்வாதாரமே இதுதான். ஆனா, உங்களுக்கு இது பொழுதுபோக்குதானே? நீங்க நிலம் வாங்கி விவசாயம் செய்ய ஆரம்பிச்சாலும் அதனோட நெளிவு சுளிவு தெரிஞ்சுக்க குறைந்தது பத்து வருஷங்களாவது ஆகும். அதுவரைக்கும் பெருசா உங்களால லாபமும் பார்க்க முடியாது. இதுக்கு பதிலா வேற வகைல எங்களுக்கு உதவுங்க. எங்களுக்கு விவசாயம் செய்ய மட்டும்தான் தெரியும். மார்க்கெட்டுல விற்கத் தெரியலை. இடைத்தரகர்களைத்தான் பெருமளவு சார்ந்திருக்கோம். எங்களை பல வழிகள்ல அவங்க ஏமாத்தறாங்க. இதுக்கு ஏதாவது செய்யுங்க...’

எங்களை ரொம்பவே இது யோசிக்க வைச்சது. அவங்க சொல்றதும் நியாயம்தானே? இயற்கை விவசாயம் வழியா பெருமளவு விளைச்சல் இருக்காது. அதே நேரம் போதுமானதா இருக்கும். உதாரணத்துக்கு ஒரு நாளைக்கு நூறு கிலோ புடலங்காயை இயற்கை விவசாய முறைல விளைவிக்கிறாங்கன்னா... அதுல பத்து கிலோவைத்தான் இயற்கை அங்காடிகள் வாங்கறாங்க. மீதமுள்ள தொண்ணூறு கிலோவை வேற வழியே இல்லாம குறைந்த விலைக்கு இடைத்தரகர்கள்கிட்ட விக்கறாங்க.


இந்த யதார்த்தத்துக்கு ஒரே தீர்வு, வாடிக்கையாளர்களை அவங்களுக்கு பிடிச்சுக் கொடுக்கறதுதான். வாடிக்கையாளர்களுக்கு தரமான உணவுகள் தேவை. ஸோ, இவங்க இரண்டு பேருக்கும் பாலமா இருக்க முடிவு செய்தோம். ‘பயோ பேசிக்ஸ்’ தொடங்கப்பட்டது இப்படித்தான்...” என்று ஸ்ரீதேவி முடிக்க, ரமேஷ் தொடர்ந்தார்.

“ஆனா, அவ்வளவு சுலபத்துல வாடிக்கையாளர்களை பிடிக்க முடியலை. சாதாரண கடைகள்ல ரசாயன உரம் வழியா உருவான கேரட் கிலோ இருபது ரூபாய்க்கு கிடைக்கும். ஆனா, இயற்கை முறைல விளைந்த கேரட், கிலோ ரூபாய் முப்பதுக்குத்தான் கிடைக்கும். ஏன்னா, இயற்கை விவசாயிகள் குறைவு. ஒப்பீட்டு அளவுல விளைச்சலும் ரசாயன உரம் அளவுக்கு இருக்காது. ஆனா, ஆர்கானிக் ஃபுட்தான் ஆரோக்கியமானது. இந்த ஆரோக்கியத்துக்காக கூடுதலா செலவு செய்ய மக்கள் யோசிக்கிறாங்க. அவங்களை சமாதானப்படுத்தறதுதான் எங்களுக்கு பெரிய சவாலா இருந்தது.

வெள்ளையா அரிசி இருக்கணும்னு அதை பாலீஷ் பண்ணறோம். இதனால சத்துக்கள் எல்லாம் போயிடுது. வெறும் சக்கையைத்தான் சாப்பிடறோம். இயற்கை விவசாயம் முறைல எதை பயிர் செய்தாலும் அதனோட சத்து குறையாது. தவிர ஒரு டம்ளர் வெள்ளை அரிசியை சமைச்சா இரண்டு பேர்தான் சாப்பிட முடியும். இயற்கை விவசாய அரிசி அப்படியில்ல. அது விரியும் தன்மை கொண்டது. அதனால ஒரு டம்ளர் அரிசியை சமைச்சா, மூன்று பேர் வரை சாப்பிட முடியும். நார் சத்து அதிகமா இருக்கறதால உடல் பருமன், நீரழிவு பிரச்னை வராது...”





என்ற ரமேஷிடம் அவர்கள் செய்து வரும் பணி குறித்து கேட்டோம்.

“இயற்கை விவசாயிகளிடமிருந்து நேரடியா கொள்முதல் செய்து வாரத்துக்கு இரண்டு நாட்கள் - செவ்வாய், சனி - வாடிக்கையாளர்களுக்கு சப்ளை செய்யறோம். இதுக்காக தனி இடம் எல்லாம் நாங்க அமைக்கலை. ஏன்னா, காய்கறி பழங்களை சேமிச்சு வைக்கும் ஐடியா இல்லை. ஒருநாள் முன்னாடி ஆர்டர் எடுப்போம். அதை மறுநாள் விவசாயிகளிடமிருந்து வாங்குவோம். நாங்களே நேரடியா ஆர்டர் கொடுத்தவங்களுக்கு சப்ளை செய்துடுவோம்.

ஸோ, காய்கறி பழங்கள் எல்லாம் ஃப்ரெஷ் ஆக இருக்கும். போன் செய்து அல்லது வாட்ஸ் அப்புல மெசேஜ் அனுப்பி அல்லது மின்னஞ்சல் மூலமா வாடிக்கையாளர்கள் ஆர்டர் தரலாம். ரெகுலர் கஸ்டமர்களுக்கு அந்த வார ஸ்பெஷல் பொருள் என்னன்னு விலையோட முன்கூட்டியே தெரிவிச்சுடுவோம். அதனால ஆர்டர் கொடுக்கறது ஈசி.

அதே சமயம் அரிசி, பருப்பு, சிறு தானியங்களை ஸ்டாக் வைச்சிருப்போம். இது கூட ஆறு மாசம் வரைக்கும்தான். ஏன்னா, இயற்கை முறைல இதெல்லாம் விளைந்தது. சீக்கிரம் பூச்சி வரும்...” என்று சொன்ன ரமேஷ், முப்பது இயற்கை விவசாயிகளிடமிருந்து இப்போது கொள்முதல் செய்வதாக குறிப்பிட்டார்.

“வாரத்துக்கு ஏறக்குறைய நூறு ஆர்டர் வருது. சுமாரா முந்நூறு கிலோ காய்கறி, பழங்களை வாராவாரம் சப்ளை செய்யறோம். நூறு வகையான உணவுகள் எங்ககிட்ட இருக்கு. அரிசில ஆறு வகைகள். சிறு தானியங்கள்ல எத்தனை வகைகள் இருக்கோ அது அத்தனையும் எங்ககிட்ட இருக்கு. அரிசியா, ரவையா, மாவா எல்லா உருவத்திலும் ஸ்டாக் இருக்கு. பருப்பு வகைகளும், நாட்டு சர்க்கரையும், இந்து உப்புகளும் கூட விற்பனை செய்யறோம்...” என்று ரமேஷ் நிறுத்த, ஸ்ரீதேவி தொடர்ந்தார்.

“இதுதவிர இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வையும் விவசாயிகளிடம் ஏற்படுத்தி வருகிறோம். ரசாயன உரம் அளவுக்கு ஆரம்பத்துல இயற்கை விவசாயம் விளைச்சலை கொடுக்காது. ஆனா, போகப் போக இயற்கை விவசாயம்தான் அதிக விளைச்சலை கொடுக்கும். ரசாயன உர விளைச்சல் படிப்படியா குறையும்.

இந்த உண்மையை விவசாயிகளுக்கு புரிய வைக்கிறோம். இயற்கை விவசாயிகளோட எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகரிக்குதோ அந்த அளவுக்கு பொருட்களோட விலையும் குறையும்.

இப்ப வாரத்துக்கு நூறு ஆர்டர் வருது. அது படிப்படியா உயரணும். மக்கள்கிட்ட நாங்க கேட்டுக்கறது எல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். ஆரோக்கியமா இருந்தாதான் உயிர் வாழவே முடியும். அதனால ரசாயன உரம் மூலமா விளையற பொருட்களை வாங்காதீங்க. உடலை கெடுத்துக்காதீங்க...”

அழுத்தம்திருத்தமாக ஸ்ரீதேவி சொல்ல, அதை ஆமோதித்தார் ரமேஷ் சந்திரன்.

– ப்ரியா